**தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸின் உரை**
**இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் இலங்கை – அமெரிக்க வர்த்தக பேரவையின் மூன்றாவது வருடாந்த பொதுக் கூட்டம்**
**ஜுன் 30, 2019**
**ஹில்டன் ரெசிடன்ஸ்**

**தூதுவர் டெப்லிட்ஸ்:** மாலை வணக்கம்! இங்கு பிரசன்னமாகியிருக்கும் அனைவரையும் காண்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இன்றையதினம் உங்கள் முன்னிலையில் உரையாற்றுவதற்கு அழைப்பு விடுத்த அசங்க மற்றும் சமந்தவுக்கு மிக்க நன்றி. இன்றயை நாளின் சில அலுவல்கள் பற்றி பேசுவதற்கான சிறந்த சந்தர்ப்பமாக நான் இதை கருதுகிறேன்.

இலங்கையில் வர்த்தக வளர்ச்சிக்கும் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளுக்கும் உதவுவதற்கான அமெரிக்க அரசாங்கத்தின் முயற்சிகள் பற்றி சிறிது பேசுவதற்கு நான் எதிர்பார்க்கிறேன்.

இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து எமது 70 வருட கால நீண்ட வரலாற்றில் அமெரிக்கா ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் மேலதிகமான நிதியை மீளச் செலுத்தத் தேவையற்ற நன்கொடையாக மற்றும் நேரடி அபிவிருத்தி உதவிகளாக வழங்கியுள்ளது. இந்த நிதியுதவிகள் இலங்கையில் நோய்களை ஒழிப்பதற்கு, விவசாய உற்பத்திகளை ஊக்குவிக்க, இளம் சமுதாயத்தினரின் கல்வியறிவை வளர்ப்பதற்கு உதவியுள்ளன. இவை ஆய்வு மற்றும் அபிவிருத்தியைத் தூண்டியிருப்பதுடன், கலையை ஊக்குவிப்பு மற்றும் இயற்கை அனர்த்தங்களிலிருந்து நாடு மீள்வதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நாம் தற்பொழுது 21ஆவது நூற்றாண்டின் கால்பகுதியின் ஊடாக பயணித்துக்கொண்டிருந்தாலும், வித்தியாசமான திசையொன்றில் எமது பங்காண்மையை விஸ்தரிப்பது தொடர்பில் பணியாற்றுவதற்கான நேரம் இதுவாகும். கொடையாளி மற்றும் பெறுனர் என்பதற்கு அப்பால் சமமான பங்காளர்கள் என்பதை நோக்கியதாக அது இருக்க வேண்டும். தூதுவர் என்ற வகையில், எமது நாடுகளுக்கு இடையில் வர்த்தக உறவுகளை பலப்படுத்துவது எனது முதன்மையான முன்னுரிமைக்குரிய விடயங்களின் மத்தியில் காணப்படுகிறது. அதுவே நாம் முன்னோக்கி செல்ல வேண்டிய திசையென்று நான் கருதுகிறேன்.

உலகளாவிய ரீதியிலும் அதேபோல், இலங்கையிலும் நாம் காண எதிர்பார்க்கும் உறுதியான மற்றும் அனைத்தையும் உள்வாங்கிய பொருளாதார வளர்ச்சி அத்தியாவசியமானது என்று அமெரிக்கா கருதுகிறது. உண்மையில் இந்த நாட்டில் அது முக்கியமானது. இலங்கையின் இறையாண்மையை பாதுகாப்பதற்கும் இந்த நாட்டிலான சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தின் மேம்பாட்டிற்கும் அது அத்தியாவசியமாகும். அத்துடன், அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி என்பது இலங்கை மக்களின் சௌபாக்கியமான எதிர்காலத்துக்கும் நிச்சயம் அத்தியாவசியமானதாகும்.

வெளிப்படையாக சொல்வதென்றால், அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கான இந்த தேவையானது அனைத்து நாடுகளுக்கும் உண்மையாகும். அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று, உயர்ந்து எழும் அலையானது அனைத்து படகுகளையும் தூக்கும். இவ்வாறான சூழ்நிலையில், மிலேனியம் சலெஞ்ச் கோர்ப்பரேஷன் ஒப்பந்தம் தொடர்பில் உங்களுடன் பேசுவதற்கு நான் விரும்புகின்றேன். இது பற்றி நீங்கள் பெரும்பாலும் நிறைய கேள்விப்பட்டிருப்பீர்கள் என்பதுடன், பலப்படுத்தப்பட்ட வர்த்தக உறவுகளுக்கான எமது முயற்சிகளின் சூழலில் புரிந்துணர்வையும் கொண்டிருப்பீர்கள்.

இந்த 5 வருட உத்தேச உதவி ஒப்பந்தம் பற்றிய சில முக்கியமான விடயங்களுடன் நான் ஆரம்பிக்கின்றேன் :

மிலேனியம் சலெஞ்ச் கோர்ப்பரேஷன் என்பது அமெரிக்க அரசாங்கத்தின் அபிவிருத்தி உதவி முகவரமைப்பாகும். யூஎஸ்எயிட் பற்றி நீங்கள் அனைவரும் கேள்விப்பட்டிருப்பீர்கள் என நம்புகின்றேன். அது சர்வதேச அபிவிருத்திக்கான முகவரமைப்பாகும். மிலேனியம் சலெஞ்ச் கோர்ப்பரேஷனும் இதனைப்போன்றதொரு முகவரமைப்பாகும். எனினும், இதன் திட்டங்கள் கால

வரையறைகளை கொண்டிருப்பதுடன், இது பெரும்பாலும் பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்தியை நோக்காகக் கொண்டதாகும்.

2004ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா உலகம் முழுவதிலுமுள்ள 29 நாடுகளுடன் ஏற்படுத்தியுள்ள 37 மிலேனியம் சலெஞ்ச் கோர்ப்பரேஷன் ஒப்பந்தங்களின் ஊடாக 14 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்துள்ளது. உதாரணமாக: ஜோர்ஜியா நாட்டில் விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொயிறியல் மற்றும் மருத்துவ துறைகளில் சர்வதேச ரீதியாக அங்கீகாரம் பெற்ற பட்டங்களின் எண்ணிக்கையை அமெரிக்க அரசாங்கம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. நாம் ஒப்பந்தம் செய்து கொண்ட இன்னுமொரு நாடான செனகலில், நம்பகமான மின்சார விநியோகத்துக்கு எழுந்திருக்கும் அதிகரித்த கேள்வியை பூர்த்தி செய்வதற்கு எரிசக்தி துறையை பலப்படுத்துவதற்கு நாம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். தெற்காசியாவில் முதலாவது மிலேனியம் சலஞ்ச் கோர்ப்பரேஷன் ஒப்பந்தத்திற்கு கைச்சாத்திடும் கௌரவம் எனக்கு கிடைத்த நேபாளத்தில் குறைந்த எரிசக்தி விநியோகம் மற்றும் உயர்ந்த எரிசக்தி போக்குவரத்து செலவீனம் பற்றிய பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கு இந்நிதியுதவி உதவியளிக்கிறது.

ஊடகங்களில் நீங்கள் வாசிக்கும் ஒப்பந்தமானது அபிவிருத்தி உதவி ஒப்பந்தமொன்றாகும். உண்மையில், இந்த அமைப்பின் உறுப்பினர்கள், இலங்கை வர்த்தக சம்மேளனம் மற்றும் ஏனைய பலருடன் இந்த ஒப்பந்தம் பற்றி பல தடவைகள் கலந்துரையாடப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாகவோ அல்லது குறைவாகவோ எதுவும் இல்லை.

இலங்கை தொடர்பில் என்ன? இந்த ஒப்பந்தம் இந்த நாட்டில் என்ன செய்யப்போகிறது? அனைத்தையும் உள்வாங்கிய பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியை ஊக்குவிப்பதன் நிமித்தம் இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கை மக்களுக்கு அமெரிக்கா 480 மில்லியன் அமெரிக்க டொலரை நன்கொடையாக வழங்குகிறது. இது அமெரிக்க மக்களிடம் இருந்தான அன்பளிப்பே தவிர கடன் கிடையாது. இது நாட்டின் எதிர்காலத்தை அடகுவைக்கும் கடன் அல்ல.

இந்த நன்கொடை எதற்கு உதவுகிறது? போக்குவரத்து உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகளுக்கும் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் காணி நிர்வாக மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கும். இதில் எதுவும் இலங்கையின் கடனில் ஒரு ரூபாவை கூட மேலதிகமாகச் சேர்க்காது.

மிலேனியம் சலெஞ்ச் கோர்ப்பரேஷன் நன்கொடை தொடர்பில் கணிசமானளவு தவறான தகவல்கள் ஊடகங்களில் வெளிப்படுத்தப்படுகின்றன. எனவே நான் இதில் இன்னும் சில உண்மைகளை பகிர்ந்துகொள்கின்றேன்.

ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று தனியார் துறை மற்றும் சிவில் சமூகத்தினரிடம் இருந்தான முக்கியமான உள்ளீடுகளுடன் இலங்கை அரசாங்கமும் அமெரிக்க அரசாங்கமும் கூட்டாக இணைந்து இந்த உத்தேச ஒப்பந்தத்தை தயாரித்துள்ளன. இதே அறையில் அமர்ந்திருக்கும் இந்த பேரவை, வர்த்தக சம்மேளனம் மற்றும் இலங்கையிலுள்ள அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தில் இருந்தான உங்களில் சிலரிடம் இருந்தும் கூட இவை பெறப்பட்டிருக்கலாம்.

இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் போக்குவரத்து உட்கட்டமைப்பு மற்றும் காணி நிர்வாகம் ஆகிய இரண்டு விடயங்கள் தடையாக இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளன – எனவேதான் மிலேனியம் சலெஞ்ச் கோர்ப்பரேஷனில் இந்த இரண்டு விடயங்கள் கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்துக்கு அமைய உத்தேச திட்டங்களின் சகல அம்சங்களிலும் இலங்கை கட்டுப்பாட்டையும் கண்காணிப்பையும் கொண்டிருக்கும். முன்னேற்றப்படவுள்ள சகல வீதிகள், தரமுயர்த்தப்படவுள்ள ஒவ்வொரு சமிக்ஞை மற்றும் பஸ் வலையமைப்புக்கள், டிஜிட்டல் மயப்படுத்தப்படவுள்ள காணிப் பதிவுகள் மற்றும் காணி அளவீடுகள் தொடர்பில் சகல அம்சங்களிலும் இலங்கையின் கட்டுப்பாடு இருக்கும். அமெரிக்கா இந்த ஒப்பந்தத்தின் கீழ் எந்தவொரு காணியையும் உரிமைகொள்ளவோ, கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவோ அல்லது நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரவோ மாட்டாது.

தற்பொழுது எம்மிடம் உண்மையான தகவல்கள் உள்ளன. அதில் எனக்கு என்ன உள்ளது (What's In It For Me - WIIFM) என்ற விடயத்தைப் பற்றிப் பேசுவோம். இந்த சுருக்கப் பெயர் பற்றி உங்களில் பலரும் கேள்விப்பட்டிருப்பீர்கள் என்று நாம் நம்புகிறேன். வர்த்தகத்தில் உள்ளவர்கள் என்ற வகையில் மதிப்பு முன்மொழிவொன்றுக்கான இறுதி இருப்புநிலையை எதிர்பார்க்கிறீர்கள். ஆகவே, மிலேனியம் சலெஞ்ச் கோர்ப்பரேஷன் வழங்கவுள்ள மதிப்பு முன்மொழிவுகள் பற்றிப் பேசுவோம்.

முதலாவது திட்டத்திலிருந்து ஆரம்பிப்போம். ஏனெனில் அது உங்கள் தனிப்பட்ட மற்றும் வர்த்த வாழ்க்கையில் தாக்கத்தைச் செலுத்தும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து முகாமைத்துவ முறைமை மற்றும் பஸ் நவீனமயப்படுத்தும் திட்டங்களால் அதிகரித்துள்ள வாகன நெரிசலுக்கு இத்திட்டம் தீர்வாக அமையும். இலங்கையின் பொருளாதார வாய்ப்புக்களுக்கு மேம்படுத்தப்பட்ட நடமாட்டம் மிகவும் முக்கியமானதாகும். கொழும்பையும் அதன் புறநகரங்களையும் இணைக்கும் பிரதான வீதிகளில் நாளொன்றுக்கு 1.9 மில்லியன் பயணங்கள் இடம்பெறுவதாக 2014ஆம் ஆண்டு மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் ஆய்வொன்று கூறுகிறது. 2035ஆம் ஆண்டாகும்போது இந்தப் பயணங்களின் எண்ணிக்கை நாளொன்றுக்கு 4.5 மில்லியனாக அதிகரிக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இன்று இருப்பதைப் போன்று பலமடங்கான வாகன நெரிசலை சிந்தித்துப்பாருங்கள்… இந்த வாகன நெரிசலுக்கு கட்டணமாக காசோலையொன்றை எழுதுவதாக நீங்கள் யோசித்துப்பாருங்கள். இந்தப் போக்குவரத்து இடையூறு மட்டுப்படுத்தப்படுகின்றது என்றால் நீங்கள் என்ன செய்வீர்கள். இந்த போக்குவரத்து நெரிசல்களால் குறிப்பாக அதற்காக செலவிடப்படும் நேரத்தினால் பொருளாதாரத்துக்கு ஏற்படும் செலவீனம் 2014ஆம் ஆண்டில் 400 பில்லியன் ரூபாய்கள் என மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் கணிப்பிடப்பட்டுள்ளது. 2020ல் இந்தத் தொகை 1.8 ட்ரில்லியன் ரூபாய்களாக அதிகரிக்கும்.

ஆகவே, நிறுவனங்கள், சிறிய மற்றும் மத்திய தொழில்முயற்சிகளோ அல்லது பாரிய வர்த்தகங்களோ, தனது உற்பத்திகளை சந்தைக்கு எடுத்துச் செல்லும்போது அல்லது தமது பொருட்களை துறைமுகத்துக்கு கொண்டு செல்லும்போது அல்லது சுற்றுலாப் பயணிகள் வரும்போது இந்த நிலைமையப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். சிறப்பாக செயற்படும் வீதிக்கட்டமைப்பிலேயே இதன் அடிப்படை தங்கியிருப்பதுடன், கொழும்பு வீதிகளில் வாகனத்தைச் செலுத்துபவர் அமைதியான மனோநிலையில் வாகனத்தில் செல்லவேண்டும்.

பஸ் நவீனமயப்படுத்தல் செயற்பாடு முக்கியமானது. ஏனெனில், இலங்கையின் சனத்தொகையில் அறைவாசிக்கு மேலானவர்கள் குறிப்பாக வசதி குறைந்தவர்களின் போக்குவரத்து மார்க்கமாக பஸ் காணப்படுகிறது. மிலேனியம் சலெஞ்ச் கோர்ப்பரேஷன் நிதியுதவி ஸ்மார்ட் அட்டையின் அடிப்படையில் தன்னிச்சயாக கட்டணங்களை அறவிடும் பொறிமுறையை அறிமுகப்படுத்தவும், அரச மற்றும் தனியார் பஸ் இயக்குனர்களின் பஸ் கொள்வனவுக்கும் உதவியளிக்கும்.

மதிப்பு முன்மொழிவில் அமெரிக்க அரசாங்கம், மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகணங்களுக்கிடையிலான ஏறத்தாள 131 கிலோமீற்றரைக் கொண்ட மத்திய வளைய வீதி வலையமைப்பை மேல் மாகாணத்தின் சந்தைகள் மற்றும் துறைமுகங்களுடன் இணைப்பதை மேம்படுத்த 350 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க எதிர்பார்த்துள்ளது. இதன் பயனாக இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சியடையும் என அமெரிக்கா நம்புகிறது.

இதில் எமக்கு என்ன உள்ளது? பலமான பொருளாதாரம் சிறந்த தனியார்துறை வாய்ப்புக்கள் கிடைக்கும். உயர்ந்து எழும் அலையானது அனைத்து படகுகளையும் உயர்த்தும்.

இந்தத் திட்டத்தின் காணி நிர்வாகப் பகுதியானது அதிகளவான கவனத்தை ஈர்த்துள்ளது. அரசாங்கம், மக்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு இதனால் என்ன கிடைக்கும் என்று பார்த்தால், தலைப்பு மாற்றத்தின் ஊடாக ஒருவர் காணியை மாற்றும் வகையிலான கொள்கை மறுசீரமைப்பு மற்றும் காணி தகவல் மற்றும் பதிவுகளை டிஜிட்டல் மயப்படுத்தி பலப்படுத்தல். அதாவது ஈ-அரச காணி தகவல் முகாமைத்துவ முறைமை மற்றும் ஈ-காணி பதிவு போன்றன ஊடாக பலமான காணி சந்தையை இலங்கை உருவாக்க முடியம்.

சிறந்த காணி தகவல் முறையின் ஊடாக, உதாரணமாக சகல அரச காணிகளின் அளவுகள் தொடர்பில், பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட காணிகள் பற்றியும் அவற்றின் பெறுமதிகள் தொடர்பில் அரசாங்கத்திடம் தெளிவான தகவல் காணப்படும்.

மேலதிகமாக இலங்கை பிரஜைகள் டிஜிட்டல் முறையில் தமது காணி உறுதிகளையும் தலைப்புக்களையும் மாற்ற முடியும், இதனால் ஆவணப் பரிமாற்றங்களில் ஏற்படுகின்ற சேதங்கள், இழப்புக்கள் அல்லது களவுகளைத் தவிர்க்க முடியும். வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறல் என்பன வர்த்தகத்துக்கும் தனிப்பட்ட நபர்களுக்கும் சிறந்ததாகும்.

இதனால் அமெரிக்காவுக்கு என்ன கிடைக்கிறது? இந்த திட்டத்தின் இறுதியில் பெருந்தொயைனா காணிகளை அமெரிக்கா சொந்தமாக்கிக் கொள்ளப்போகிறது என்று ஊடகங்களில் வெளியான சில தவறான தகவல்களில் தெரிவிக்கப்பட்டிருந்தது. உண்மையில் எமது 480 மில்லியன் அமெரிக்க டொலர் என்பது மிகப்பெரும் கட்டணமாகும். இது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது.

எமது நாடுகளுக்கிடையிலான வர்த்தக உறவுகளைப் பலப்படுத்துவதற்கே நான் முன்னுரிமை அளிக்கின்றேன் என்பதை முன்னரே கூறியிருந்தேன். சில நாடுகள் அரசுக்கு சொந்தமான கம்பனிகளை மானிய அடிப்படையில் வளங்குவதன் ஊடாக அல்லது பின்கதவு ஒப்பந்தங்களினால் வர்த்தகத்தை முன்னேற்ற முயற்சிக்கும். எனினும் அமெரிக்காவானது பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்ய உதவுதல், தனியார் துறையினருக்கு போட்டிநிறைந்த வாய்ப்புக்களை உருவாக்குவது போன்ற விடயங்களின் ஊடாகவே வர்த்தகத்தை ஊக்குவிக்கிறது.

எனவே, வர்ச்சியடையும் இலங்கை அமெரிக்காவின் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு வாய்ப்பாக அமையும் என்ற அமெரிக்காவின் நிலைப்பாடு உங்களுக்குப் ஆச்சரியமளிக்காது என்று நான் கருதுகிறேன். எல்லாவற்றுக்கும் அப்பால் இலங்கையின் பாரிய வர்த்தகப் பங்காளராக அமெரிக்கா காணப்படுகிறது. இலங்கையின் முன்னணியான ஏற்றுமதி நாடாகவும் காணப்படுகிறது. வர்த்தக வாய்ப்புக்களை அதிகரிப்பதன் ஊடாக பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டு வறுமையை ஒழிப்பதற்கான வாய்ப்பு கிடைக்கும். இது இரண்டு நாடுகளுக்கும் வெற்றியளிக்கும் சூழலை வழங்கும். இதுவே எமக்கும் உங்களுக்குத் தேவை.

முடிவாக, வளர்ந்துவரும் உலக பொருளாதார எதிர்காலத்தில் தனியார்துறை கணிசமான பங்காற்ற வேண்டும் என நான் கருதுகின்றேன். புதிய யோசனைகள், புதிய அணுகுமுறைகள் மற்றும் வினைத்திறனாக மற்றும் பெற்றுக்கொள்ளக்கூடிய விலையிலான உற்பத்திகள், சேவைகள் எம்மை மேலும் திறன்வாய்ந்ததாக மாற்றும். www.mcc.gov என்ற இணையத்தளத்தில் உள்ள எம்முடன் பணியாற்றுங்கள் (Work with Us) என்ற இணைப்பின் ஊடாகச் சென்று பங்காண்மையை ஏற்படுத்த மற்றும் முதலீட்டு வாய்ப்புக்கள் பற்றி இந்த வர்த்தக சம்மேளனம் கவனம் செலுத்தவேண்டும் என நான் ஊக்குவிக்கின்றேன். ஏனைய நாடுகளுடன் செய்துகொள்ளப்பட்ட எமது அனைத்து மிலேனியம் சலேஞ்ச் கோர்ப்பரேஷன் ஒப்பந்தங்களையும் இந்த இணையத்தளத்தில் பார்க்க முடியும்.

இந்த உலகம் பலமாகவும், இறைமை உடையாதாகவும், நாடுகள் ஒன்றிணைந்து பங்காண்மையை ஏற்படுத்தும் பலத்தைக் கொண்டிருந்தால் இந்த உலகம் பாதுகாப்பாக இருக்கும். அனைத்தும் உள்வாங்கப்பட்ட பொருளாதார வளர்ச்சி மற்றும் வெளிப்படைத்தன்மை என்பன வாழ்க்கையை முன்னேற்றும் என்பதை நாம் அறிந்திருப்பதால் உலகத்துடன் பொருளாதார வாய்ப்புக்களை விஸ்தரிக்க அமெரிக்கா பணியாற்றி வருகிறது. உயர்ந்து எழும் அலையொன்றானது அனைத்து படகுகளையும் உயர்த்தும் என்று நாம் நம்புகிறோம்.

நன்றி!